தமிழ் நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1974 சனவரி 18.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் திருவாளர்கள் முகமது அப்துல் சலாம், அப்துல் ரகிமான், கே. விநயகம் ஆகியோர் மறைவு குறித்தும், திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் மறைவு குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குண்டூர்—முகமதியர்—நாட்டுப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1946-ம் ஆண்டு முதல் 1951-ம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த திரு முகமது அப்துல் சலாம் அவர்கள் 5—12—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

திருநெல்வேலி முகமதியர் நாட்டுப்புற தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு 1948-ம் ஆண்டு முதல் 1951-ம் ஆண்டுவரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. அப்துல் ரகிமான் அவர்கள் 8—12—1973-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

1952-ம் ஆண்டு முதல் 1957-ம் ஆண்டுவரை செங்கற்பட்டு தொகுதியிலிருந்தும், 1957-ம் ஆண்டு முதல் 1962-ம் ஆண்டுவரை சென்னை தியாகராயநகர் தொகுதியிலிருந்தும், பின்னர் 1967-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு வரை திருத்தணித் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப்பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. கே. விநயகம் அவர்கள் 8—1—1974-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்,

தமிழ்நாட்டில் பெரும் தொழில் வல்லுநராக இருந்த திரு. ஜி. டி. நாயுடு அவர்கள் 4—1—1974-ம் நாள் மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.)

2. இரங்கல் தீர்மானம்.

பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்களின் மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாட்டின் ஒப்பற்ற தலைவரான தந்தை பெரியார் அவர்கள் 24—12—1973 அன்று மறைவு எய்திய துயரமான செய்தியைப் பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியார் அவர்களின் மறைவு குறித்த இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிவார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "நமது தமிழகத்தின் ஒப்பற்ற தனிப் பெருந் தலைவரும், தந்தை பெரியார் என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பெற்றவரும், இந்திய நாட்டு விடுதலை இயக்கத்தின் தளபதிகளில் ஒருவரும், சாதியற்ற சமுதாயத்தை அமைக்க வேண்டுமென்று பாடுபட்டவரும், சுயமரியாதை இயக்கத்தின் தந்தையும், சமூகத்தின் மூட நம்பிக்கைகளைக் களைய தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றியவரும், தமிழ்ச் சமுதாயம் மேன்மையடைய வேண்டுமென்று தியாகங்கள் பல செய்தவருமான பெரியார் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் மறைவு எய்தியமை குறித்து இம் மன்றம் தனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறாத் துயரையும் தெரிவிப்பதோடு பெரியார் மறைவால் வருந்தும் அவரது துணைவியார் மணியம்மையாருக்கும், குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது."